| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திருமதி.ரம்யா<br>க/பெ.திரு. | அ.வ.எண். 6/2015 | 15.07.2026 |

<u>குறுக்கு விசாரணை</u>

1) நான் இவ்வழக்கில் பின்னிட்டு 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக அசல் வழக்கு 2015 ல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டது என்பதை தெரிந்துகொண்டேன் என்றால் தற்போது படித்து தெரிந்து கொண்டேன். நான் வழக்கு சொத்தை 2023 ல் தான் கிரையம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் நான் சொல்லியதா என்றால் எனது மாமனார் பாலசுப்ரமணியன், எனது வழக்கறிஞரிடம் சொல்லி தயார் செய்தது, அதில் நான் கையொப்பம் செய்துள்ளேன்.

2) இவ்வழக்கு 2, 3 பிரதிவாதிகளான சின்னகருப்பன், பழனியப்பன் ஆகியோரின் பகர அதிகார முகவரான 4ம் பிரதிவாதி குணசேகரன், 1ம் பிரதிவாதி ராஜாமணிக்கு வழக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்பதை தெரிந்துகொள்ளவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. எனது மாமனார் எங்கு உள்ளார் என்றால் இலால்குடி ஆங்கரையில் உள்ளார். எனது மாமனார் ஒரு வழக்கறிஞர் என்றால் சரிதான். இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது எனது மாமனார் எனது பெயரில் பதிவு செய்து கொடுத்துவிட்டார் என்றால் இவ்வழக்கு குறித்து எனக்கும் தெரியாது, எனது மாமனாருக்கும் தெரியாது.

3) இவ்வழக்கு குறித்து எனது மாமனாருக்கும் தெரியாது என்ற விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனது மாமனார் சொல்லியே

தெரியும். வழக்கு சொத்து யாருக்கு உரிமையானது என்ற எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் தெரியும், ராஜாமணி என்பவரிடம் வாங்கியுள்ளோம். மேற்படி ராஜாமணிக்கு யாரிடமிருந்து சொத்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சக்திவேல் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் ஆளை தெரியாது, வருவாய் ஆவணத்தில் பார்த்தது.

4) வழக்கு சொத்திற்கு உரிய வருவாய் ஆவணங்கள் எதிலும் சக்திவேல் என்ற பெயரை கிடையாது என்றால் சரியல்ல, பெயர் உள்ளது. வழக்கு சொத்திற்கு உரிய சக்திவேல் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வழக்கறிஞருக்கு தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் பெயர்கள், எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில், தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

5) வழக்கு சொத்தை கைப்பற்ற வேண்டும் என்ற தீய எண்ணத்தில் மோசடியாக கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்து இவ்வழக்கு சொத்துக்களை வில்லங்கப்படுத்தும் முயற்சியை எனது மாமனார் வழக்கறிஞர் பாலசுப்ரமணியன் செய்துள்ளதால் நான் இவ்வழக்கில் 5ம் பிரதிவாதியாக வாதியால் சேர்க்கப்பட்டுள்ளேன் என்றால் தீய எண்ணத்தில் வாங்கவில்லை, ஏன் என்னை கட்சி சேர்த்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது.

6) வழக்கு சொத்தை பொறுத்து 2023ல் எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட பி.சா.ஆ.3 கிரைய ஆவண எண்.2367/2023 உரிய மறுபயனுக்கு பதிவு செய்யப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 1 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் முன்னிலை ஆகாமல் தவிர்த்து, தோன்றா தரப்பினர் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தில் வாதியே இன்றளவும் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் இல்லை.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI
Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.